Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 484/2024

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | ஸ்டேட் பாங்க் வேலை (ஓய்வு) |
| பெயர். | - | பாவாடை | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | கோபால் | சமயம் | - | |
| கிராமம் | - | சரவணப்பாக்கம் | வயது | - | |

20.08.2025

1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. 1, 3 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது சரவணப்பாக்கம் கிராமத்தில் வசித்து ஸ்டேட் பாங்கில் மெசஞ்சராக வேலை செய்து ஓய்வு பெற்று விட்டேன். புகார்தாரர் ஷாஜகானை எனக்கு தெரியும். எதிரிகளை தெரியும். ஷாஜகானுக்கும், அவரது மனைவியான முனுசியாவிற்கும் அவ்வப்போது சண்டை ஏற்பட்டு முனுசியா அவரது தாய் வீட்டிற்கு சென்றுவிடுவார். அதன் பிறகு ஷாஜகானின் பெற்றோர்கள் முனுசியாவை சமாதானம் செய்து அழைத்து வருவார்கள்.

2. சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்பு ஞாயிற்றுக்கிழமை மதியம் 01.00 மணியளவில் ஷாஜகான் வீட்டில் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்த போது முனுசியாவும் அவரது சகோதரரும் ஷாஜகானை கையாலும், காலாலும் மாறி மாறி அடித்தார்கள். பின்பு நானும், அங்கிருந்தவர்களும் சண்டையை மறித்து அனுப்பிவைத்தோம். வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எதெர்த வீட்டுக்காரரான ரஷீத்கான் எனது நண்பரா என்றால் இல்லை தெரிந்தவர். வீட்டுள்குள்ளேயே நடந்தது எதுவும் எனக்கு தெரியாது என்றால் சத்தம் கேட்டு நான் போய் பார்த்தேன். நான் பார்த்த போது அவருடைய மனைவியும் சேர்த்து நான்கு பேர் அடித்துக்கொண்டிருந்தார்கள். அந்த 4 பேர் யார் யார் என்றால் முனுசியாவின் சகோதரர்கள். அவர்களுடைய பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், முனுசியாவின் மாமியார் கேட்டுக்கொண்டதின் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை நடந்ததை சொல்கிறேன்.

2. போலீசார் என்னை என்றைக்கு விசாரித்தார்கள் என்றால் சண்டை நடந்து 2 மாதம் கழித்து விசாரித்தார்கள். பேங்கில் வந்து விசாரித்தார்களா என்றால் இல்லை வீட்டில் வந்து விசாரித்தார்கள். என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றாலும், ரஷீத்கான் மனைவி கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.,
T.V.Nallur.